# கழுகின் சத்தம்

## டிசம்பர் 25, 2023



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

மனிதன் எதை “மதியீனம்” என்று அழைக்கிறானோ, அதை தேவன் “மகத்தானது“ என்று அழைக்கிறார். மனிதன் எதை “மகத்தானது” என்று அழைக்கிறானோ, தேவன் அதை “மதியீனம்” என்று அழைக்கிறார்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-1231 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #1

9. அநேக சமயங்களில் மக்கள் தவறாக புரிந்து கொள்ளுகின்றனர். ''சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் முன்பு வழக்கமாக போகிற இடங்களுக்கெல்லாம், மற்ற ஊழியக்காரர்கள் செய்வது போல், நீங்கள் போகிறதில்லையே'' என்று கூறுகிறார்கள். ஒரு பாடத்தை நான் கற்றுக்கொண்டேன். நான் வேதத்திலிருந்தும், நமது கர்த்தரிடத்திலிருந்தும் கற்றுக்கொண்ட பாடமானது, இயேசுவானவர் தன்னை யாவரும் காண்பதற்குரிய காட்சிப்பொருளாக ஆக்கிக் கொள்ளவில்லை, என்பதுதான். அந்த விஷயத்தில் அவர் குறைவுபட்டார். அவரிடத்தில், யாவரும் தன்னைக் காட்சியாக காணவேண்டும் என்ற தன்மை இல்லை.

அவருடைய சீஷர்களும் அப்படிப்பட்ட வர்களாக இருக்கவில்லை. ஒருபொழுதும் அவர்கள் தங்களை காட்சிப் பொருளாக, காட்சிக்குரிய மனிதர்களாக, ஆக்கிக் கொள்ளவில்லை. அங்கே தான் நம்மில் அநேகர் இன்றைக்கு படகைத் தவற விட்டுவிட்டோம். ஒருவேளை இது என்னுடைய சொந்த அபிப்பிராயமாக இருக்கக்கூடும். நாம் யாவற்றையும் பற்றி பெரிதாக தம்பட்டமடித்துக்கொள்கிறோம். அது பரிசுத்தமானதொன்று என்று இருப் பதைவிட, பெரிதாக காட்சிக்குரியதாக தம்பட்டமடித்துக்கொள்ளுதலாகவே இருக்கிறது.

10. கர்த்தருடைய முதலாம் வருகை யில், அவரை உண்மையாகவே ஏற்றுக் கொண்டவர்களை கவனித்துப் பார்த்தீர் களா? அதில் சிமியோனும் ஒருவன்; அவன் கர்த்தருடைய வருகைக்காக எதிர்

நோக்கிக்கொண்டிருந்தான். ஒருவரும் அவனைக் குறித்து ஒன்றும் கேள்விப்பட்டிருக்கவேயில்லை. ஆலயத்தில் இருந்த குருடான அன்னாள், வனாந்திரத்தில் இருந்த யோவான் ஸ்நானன் ஆகியோரும் அப்படித்தான். இவர்கள் எல்லாம்..... யோவான் ஸ்நானன் தனக்கு ஒன்பது வயதானபோது வனாந்திரத்திற்குள் சென்று விட்டு, அவன் முப்பது வயதாகும் வரையிலும் மீண்டும் உலகுக்குத் தோன்றவேயில்லை. அதுவரையிலும் அவன் வனாந்தரத்திலேயே இருந்து வந்தான். அவ்விதமான மனிதர், இரகசியமாக விசுவாசித்து, தாழ்மையாக இருந்து கொண்டு, கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருபோதும் தங்களுடைய கூட்டங்களைப் பற்றி பெரிதாக தம்பட்டமடித்துகக்கொண்டு, அதைப்பற்றிய பெரிய விளம்பரங்களைச்

செய்து, இத்தனாம் மணி நேரம் என்றெல் லாம் போட்டு போஸ்டர்கள் பெரிதாக அடித்து பந்தா பண்ணிக்கொள்ளவில்லை. அந்தவிதமாக செய்திட விரும்புபவர் களுக்கு அதெல்லாம் சரிதான். ஆனால் எனக்கோ, அது கிறிஸ்துவுக்கேற்ற செய்கையாகப் படவில்லை .

11. அவருடைய சகோதரர்கள் ஒரு சமயம் கூறியதை நான் அறிவேன். அவர்கள் அவரிடம், "நீர் இந்த அற்புத அடையாளங்களைச் செய்கிறீர், நீர் ஏன் எருசலேமுக்கு போய் வெளியரங்கமாக அவைகளைச் செய்யக்கூடாது? நாங்கள் பஸ்கா பண்டிகைக்கு எருசலேமுக்குப் போகிறோம், நீரும் அங்கே வந்து, பிரதான ஆசாரியனான காய்பாவை அழைத்து, மற்றும் அவரைச் சேர்ந்தவர்களையும் வரவழைத்து, அங்கே அவர்களுக்கு முன்பாக இவைகளையெல்லாம் ஏன்

செய்யக்கூடாது? அவர்களும் அறிந்து கொள்ளட்டுமே!'' என்று கூறினார்கள். அவர்களுக்கு முன்பாக இவைகளைச் செய்யும், அப்பொழுது அவர்களும் உம்முடைய கிரியைகளை அறிந்துகொள்வார்களே'' என்றார்கள். ”நீரோ ஒரு கூட்டம் மீனவர்களோடும் மற்றும் இன்னபிற மக்களோடும் ஆற்றங்கரையில் உமது நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறீரே, அவர்களெல்லாம் கீழான மக்களாயிற்றே. நீர் ஏன் அங்கே போய் இவைகளைச் செய்யக்கூடாது? உலகம் அதைப் பார்க்கட்டுமே'' என்றார்கள். இயேசு “என் வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது'' என்று கூறினார்.

12. யோவான் ஒரு சமயம்..... யோவான் ஸ்நானன் அவனது வருகையைக் குறித்து வேதவாக்கியங்கள் முன்னு

ரைத்துள்ளன. அவன் வரும்பொழுது... ஏன், ஏசாயாகூட யோவான் ஸ்நானன் பிறப்பதற்கு எழுநூற்றுப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே வனாந்திரத்தில் கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று' என்று முன்னுரைத்திருக்கிறான். “மலைகளெல்லாம் ஆட்டுக் குட்டிகளைப் போல் துள்ளியது, இலைகளெல்லாம் கை கொட்டின. பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு' என்று ஏசாயா கூறியுள்ளான். இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களெல்லாம் கூறப்பட்டுள்ளன! அந்நாட்களின் ஊழியக்ககாரர்களெல்லாம் எப்படியிருந் திருப்பார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? இத்தீர்க்கதரிசன வாக்கியங்களை படித்த மக்கள், அவர்கள் இவ்வாறு கூறியிருக்கக் கூடும்: 'அந்த மகத்தான தீர்க்கதரிசி வரும்பொழுது, யாவரும் அவரை அறிந்து

கொள்ளுவார்கள். தேவன் ஆகாயத்தில் விதானத்தை விரித்து, பரலோகத்தின் நடைக்கூடத்தை தேவன் முன்னுக்கு நீட்டி, அதிலிருந்து அக்கினி இரதத்தை தோன்றச் செய்து அதை கீழே இறங்கப் பண்ணி, ஒரு தூதனுடைய கரம் அவனை பூமிக்கு பாதுகாவலாக கொண்டு வந்து சேர்த்து, இவ்வாறு அவன் வெளிப்படுவான்'' என்று அவர்கள் செய்திருப்பார்கள். ஆனால், அவன் வந்தபொழுதோ, அவன் கவர்ச்சி யற்ற முகத்தையுடைய பிரசங்கியாக, ஆட்டுத் தொலைப் போர்த்திக் கொண்டு, இடுப்பில் ஒரு தோல் துண்டை கச்சையாக உடுத்திக் கொண்ட வனாக வந்தான். ஒரு வேளை குளித்திருக்கவே மாட்டான் போலும். ஒரு வேளை மூன்று மாதத்திற் கொருமுறை அல்லது நான்கு மாதத்திற் கொருமுறையோ தான் குளித்திருக்கக் கூடும். அவன் வனாந்திரத்திலிருந்து

வெளியே வந்து, முழங்கால் அளவு சகதியாக இருந்த இடத்தில் நின்று கொண்டு, "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபமாயிருக்கிறது'' என்ற பிரசங்கித்தான். அவன் ஒருபோதும் பெருநகரங்கள் ஒன்றும் செல்லவே யில்லை. யாராவது அவன் பிரசங்கிப் பதைக் கேட்க விரும்பினால், அதற்காக யோர்தான் நதிக்கரைக்குத் தான் வரவேண் டும். அவர்கள் அதை விரும்பவில்லை. அவன் என்ன செய்தான்? அவன் தேசத்தை அசைத்தான். அவன் உலகை அசைத்தான்.

13. அங்கே ஒரு பெரிய அசைவு ஏற்பட்டுக் கொண்டிருந்தது, ஆனால் அந்த மக்களோ அதைப்பற்றி ஒன்றுமே அறிய வில்லை. இயேசு வந்தபொழுது, அவர் ஒருபொழுதும் பெரும்புள்ளிகள் நடுவில் தன்னை காண்பித்துக் கொள்ளவில்லை. அவர் தமக்கு சொந்தமானவர்களிடத்

திற்கே வந்தார். அவர் வருகையை எதிர் நோக்கிக் கொண்டிருந்தவர்களிமிடம் மட்டுமே வந்தார். அங்கேதான் அசைவு வருகிறது. இன்றைக்கு அவர் அதைத்தான் செய்கிறார். தேவனால் அழைக்கப்பட்டவர் களிடம் தான் பரிசுத்த ஆவியானவர் வருகிறார், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நடுவில் மகத்தானதொரு அசைவானது உண்டாயிருக்கிறது. மகத்தான, வல்லமை யான காரியங்கள் அவர்கள் நடுவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, ஆனால் உலகமோ அதைப்பற்றி ஒன்றுமே அறியா மல் இருக்கிறது. அவர்கள் இந்த எல்லா விதமாக சொல்நயம், காண்பதற்கு நய முள்ளதான காரியங்களையே பற்றி சிந்திக்கிறார்கள். உலகளாவிய வானொலி, தொலைக்காட்சி, ஒலி ஒளி பரப்புக்களும், பலகோடி டாலர்கள் மதிப்புள்ள கட்டிடங் கள் மற்றும் இவ்விதமான காரியங்

களையே அவர்கள் பெரிதாக நினைக்கிறார்கள். அவை தேவனுடைய பார்வையில் மதியீனமாக இருக்கின்றன. தேவன் இவ்வாறான பெரிய காரியங்களைப் பார்க்கிறதில்லை. மனிதன் எதை “மதியீனம்'' என்று அழைக்கிறானோ, அதை தேவன் ”மகத்தானது“ என்று அழைக்கிறார். மனிதன் எதை ''மகத்தானது'' என்று அழைக்கிறானோ, தேவன் அதை “மதியீனம்” என்று அழைக்கிறார். ”பைத்தியமாய்த் தோன்றுகிற பிரசங்கத்தினாலே, இழந்து போகப்பட்டவர்களை இரட்சிப்பது தேவனுக்குப் பிரியமாயிருந்தது“.

14. இப்பொழுது யோவானைப் பற்றிப் பார்ப்போம். அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' அங்கே ஒரு மத வெறியன் இருக்கிறான். ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு வனாந்திரத்திலிருந்து வெளியே

வந்துள்ள அவன், பார்க்கவே அசிங்கமாக இருப்பான். அவன் சேற்றில் நின்று கொண்டு பிரசங்கித்துக்கொண்டிருக்கிறான். யாராவது அவன் பேசுவதை போய் கேட்பார்களா?' என்று சொல்லியிருப் பார்கள். இயேசு வந்தபொழுது, "ஒரு மேசியா மாட்டுத் தொழுவத்தில் வைக்கோல் குவியல் மேல், மாடுகள் படுத்துக் கொண்டிருக்கும் இடத்தில் பிறந்திருக்கிறாரா? முறைகேடான ஒரு தாயாரா அவருக்கு உண்டு என்று கூறுகிறாய்? அவரது, தாயும் தந்தையும் விவாகம் செய்து கொள்ளும் முன்பே, அவள் தாயாகிவிட்டாளே? அவர் முறை கேடாகப் பிறந்தாரே? அந்த ஆளா மேசியா?" என்றெல்லாம் கேட்டிருப்பார் கள். ஓ, என்னே! பார்த்தீர்களா? ஆனால் அவரோ மகத்தானவராக இருந்தார். ஆனால் அவர்களோ அதை அறிய

வில்லை. பாருங்கள்? அவர்கள் அவரை அறியவில்லை. அதேபோல்தான், இன்றைய சுவிசேஷமும் மகத்தானதாக இருக்கிறது. சுவிசேஷமானது இதற்கு முன்பாக நடந்திராதபடி, பெரிய அசை வைக் கொண்டு வந்திருக்கிறது. அது கர்த்தருக்கென்று மீதியாயிருப்பவர்களிடத் தில் அசைவைக் கொண்டு வந்திருக்கிறது. அதுதான் சரி. அது அவர்களை ஆயத்த மாக்கி வைத்திருக்கிறது.

15. அவர் தனக்கு சொந்தமானவர்க ளிடத்தில் வந்தார். அவருக்குச் சொந்த மானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள வில்லை. அவர் சீஷர்களிடம், 'புறஜாதி யாரிடத்தில் போகாதிருங்கள், காணாமற் போன இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே போங்கள். நீங்கள் போகையில் உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான். ஒரு பட்டணத்திற்கு நீங்கள்

போகையில், அவர்கள் உங்களை ஏற்றுக் கொள்ளாவிடில், உங்கள் பாதங்களிலுள்ள தூசியை தட்டியெறிந்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டுப் போங்கள். நியாயத்தீர்ப்பின் நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா பட்டணத்திற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று கூறினார். அம்மனிதர்களை ஏற்றுக் கொள்ளாத நகரங்கள் ஒவ்வொன்றும் இன்றைக்கு சாம்பலாய் கிடக்கின்றன. அவர்களை ஏற்றுக் கொண்ட வைகள் ஒவ்வொன்றும் நட்சத்திரங்களைப் போல் இன்னும் நிலைத்து நின்று கொண்டிருக் கின்றன. அவ்வாறுதான் நடந்துள்ளது. பாருங்கள் அவர் பதிலளிப்பதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது அவருக்கு, ஆனால் எப்படியும் அவர் பதிலளிக்கிறார். கவலை வேண்

டாம். ஓ, நான் இன்னமும் வெளிப்படுத்தின விசேஷத்தில் ஆரம்பிக்கவில்லை. இப்படியே போனால் அதற்குள் போகவே மாட்டேன் போலும். ஓ நான் அவரைக் கண்டு, அவரது முகத்தை நோக்கிட வாஞ்சிக்கிறேன் அங்கே அவரது இரட்சிப்பின் கிருபையைப்பற்றி என்றென்றும் பாடுவேன் மகிமையின் தெருக்களில் நான் எனது சத்தத்தை உயர்த்திடுவேன், அப்பொழுது கவலைகள் யாவும் தீரும், என்றும் மகிழ்ந்திட பரம வீட்டில் சேர்வேன்.



# நாம் மற்றவருக்கு வினோதமாகக் காணப்படுகிறோம் என்பதில் ஐயமில்லை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: வினோதமானவன், 64-0614E

12 கர்த்தருக்கு சித்தமானால், இன்றிரவு சில நிமிடங்கள் வினோதமானவன் (The Odd ball) என்னும் பொருளின் பேரில் பேசப்போகின்றேன். அது ஒரு நாணய மற்ற, பக்குவமற்ற பொருள். இருப்பினும் நான் கூற எண்ணியுள்ளதற்கு இந்தப் பொருள் ஏறத்தாழ பொருத்தமானதாக இருக்கும்.

உங்களுக்குத் தெரியுமா, இன்றைக்கு அநேக செயல்களின் மூலம் ஜனங்கள் வினோதமானவர்களாகின்றனர். அவர் களை நாம் “Oddballs” என்று அழைக்கி றோம். அந்த சொல்லை நீங்கள் எப்பொழுதாவது கேட்டிருக்கக்கூடும். அது 'விசித்திரமானவன்', மற்றவனுக்கு வினோ

தமாகக் காணப்படுபவன் என்று பொருள் படும். நாம் மற்றவருக்கு வினோதமாகக் காணப்படுகிறோம் என்பதில் ஐயமில்லை.

13 ஒரு நாள் நான் கலிபோர்னி யாவிலுள்ள லாஸ் ஏஞ்சலிஸில் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, வினோதமாக நடந்து கொள்ளும் ஒரு மனிதனைக் கண்டேன். அவன் சாலையில் பகல் வேளையில் நடந்து சென்று கொண்டிருந் தான். அவன் என்ன செய்கிறான் என்று காண சாலையின் மறுபுறம் சென்றேன். எல்லோரும் திரும்பி அவனைப் பார்த்து அவனுடைய வினோதத் தன்மையைக் கண்டு கேலியாக சிரித்தனர். அவனுக்கு முன்னால் ஏதோ ஒன்று எழுதி தொங்க விட்டிருப்பதை நான் கவனித்தேன். இந்த விசித்திரமானவனில் எதைக் கண்டு ஜனங்கள் கேலியாகச் சிரிக்கின்றனர் என்று நான் காண எண்ணினேன். எனவே

அவன்.... அவனை நான் கவனித்தேன். ஜனங்கள் அவனைக் காணும் போது ஏளன மாக சிரித்தனர். ஆனால் அவனுடைய சிரிப்பு வித்தியாசமான ஒன்றாக இருந்தது - திருப்தி கொண்ட ஒரு சிரிப்பு. மற்றவர்களின் சிரிப்பு அவனை கேலி செய்வதாக இருந்தது. ஆனால் இவனோ தன் செயலில் திருப்தி கொண்டிருந்த வனைப் போல் தோன்றினது.

14 ஒரு மனிதன் தான் செய்வது சரியென்று திருப்தி கொள்ளும்போது, அது யோசிக்க வேண்டிய விஷயமே, அவன் மற்றவர்க்கு வினோதமாக தென்பட்ட போதிலும், அவன் செய்வது சரியென்று திருப்தி கொண்டிருந்தால், அவன் அதில் நிலைத்திருக்கட்டும். அவன் அருகில் நான் சென்ற போது, அவனுடைய மார்பில் ஒரு அட்டை ''நான் கிறிஸ்துவுக்காக முட்டாள்'' என்று எழுதி தொங்கவிடப்பட்டிருந்தது.

இதைக் கண்டபோது, எல்லோரும் சிரித்தனர்.

இந்த மனிதன் அவனை ஏளனம் செய்த கூட்டத்தின் மத்தியில் கடந்து சென்றுவிட்ட பிறகு, அவனுடைய முதுகில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று காண நான் திரும்பினேன். அங்கு தொங்கியிருந்த அட்டையில் ஒரு பெரிய கேள்விக் குறி காணப்பட்டது. அதன் கீழே, ''நீங்கள் யாருடைய முட்டாள்?'' என்று எழுதி யிருந்தது.

அதில் ஏதோ ஒரு கருத்து அடங்கி யுள்ளது என்று நான் எண்ணினேன். பாருங்கள்? அவன் கிறிஸ்துவுக்காக முட்டாள் அல்லது பைத்தியமாயிருப்பதில் திருப்தி கொண்டிருந்தான். பவுலும் கிறிஸ் துவுக்காக பைத்தியமானதாகக் கூறுகிறான்.

15 முழு சுவிசேஷ வர்த்தகரைச் சேர்ந்த சகோ. ட்ராய் என்பவர் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் கசாப்புக்காரர். ஒரு முறை அவர் பன்றி இறைச்சியை வெட்டிக் கொண்டிருந்தபோது, ஒருவிதமான கிருமி அவருடைய கைக்குள் புகுந்து விட்டது.... அது எவ்வகை கிருமி என்று இங்குள்ள ஆண் அல்லது பெண் யாராகிலும் அறிந்திருக்கிறீர்களா என்று உங்களைக் கேட்கிறேன். அது உங்களை அரித்து விடும். எனவே அவருடைய உயிரைக் காக்க எண்ணி அவர்கள் அவருடைய மூன்று விரல்களை முறித்து விட வேண்டியதாயிற்று. இப்பொழுது அவர் ஒரு கையில் இரண்டு விரல்கள் மாத்திரம் கொண்டவராய், இப்பொழுதும் கசாப்பு வேலையை செய்து வருகிறார்.

ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்த ஒருவன் அவருடன் லாஸ் ஏஞ்சலிஸில்

கசாப்பு கடையில் வேலை செய்து வந்தான். இவனை அவர் கிறிஸ்துவினிடம் வழி நடத்த முயன்று கொண்டே வந்தார். அவன் 'லூத்தரன்' என்றும் அது அவனுக்குப் போதுமென்றும், அவன் லூத்தரன் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவனாதலால் அவனுக்குத் திருப்தியுண்டு என்றும் அவன் கூறினான். ஒரு இரவு சகோ. ட்ராய் அவனை சபைக்கு கொண்டு செல்லும் சிலாக்கியத்தைப் பெற்றார்.

16 அவனுடைய பெயர் ஹென்றி. ஜெர்மன் மொழியில் ஹென்றி என்பது 'ஹைன்ரிச்' ஆகும். எனவே அவனை அவர்கள் 'ஹைனி' என்று கூப்பிடுவது வழக்கம். அந்த சொல்லை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவர், 'ஹைனி' என்னுடன் இன்றிரவு சபைக்கு வருகிறாயா?' என்று கேட்டார்.

அவன், 'சரி, நான் வருகிறேன்'' என்று கூறினான். அவன் ஒரு பழமை நாகரீகம் கொண்ட ஜெபக் கூட்டத்துக்கு சென்றான். அங்கு அவன் உண்மையில் உணர்த்தப் பட்டு தன் இருதயத்தை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தான். ஓ, அடுத்த நாள் இவன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருந்தான். சில நிமிடங்களுக்கு ஒரு முறை அவன் தன் கைகளை உயர்த்தினவாறு கட்டிடத் தின் வழியாக நடந்து சென்று, ''தேவனுக்கு ஸ்தோத்திரம். கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி'' என்று உரத்த சத்தமாய் கூறினதால், அவன் அங்கிருந்த எல்லோ ருடைய கவனத்தையும் கவர்ந்தான்.

பாருங்கள், அங்கு வரிசையில் இருந்த கசாப்புக்காரர் அனைவருக்கும் அவன் வினோதமானவனாக காணப்பட்டான். அவன் இறைச்சியை வெட்டிக் கொண் டிருக்கும்போது, அழத் தொடங்கிவிடு

வான். அவன் கத்தியை கீழே வைத்து விட்டு, அங்குமிங்கும் நடந்து, கிறிஸ்து வுக்கு தன் அன்பை வெளிப்படுத்தி, “ஓ, இயேசுவே, உம்மை எவ்வளவாக நேசிக்கி றேன்'' என்று சொல்லுவான் - பாருங்கள், இங்குமங்கும் நடந்து.

17 அவன் இப்படி செய்து கொண் டிருந்ததை அங்கு வந்த முதலாளி கண்டான். முதலாளி வந்ததை அவன் கவனிக்கவில்லை. அவன் இயேசுவைக் குறித்து சிந்தித்தவாறு, தன் கைகளை யுயர்த்தி, இங்குமங்கும் நடந்து, அவனு டைய கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட, ''ஓ, தேவனே, உம்மை எவ்வளவாக நேசிக்கிறேன்'' என்றான்.

முதலாளி, “ஹைனி, உனக்கு என்ன நேர்ந்தது? இந்த வரிசையிலுள்ள அனை வருமே அதைக் குறித்து பேசுகின்றனர்.

உனக்கு என்ன சம்பவித்தது?'' என்று கேட்டார்.

அதற்கு ஹைனி, “ஓ, முதலாளி, தேவனுக்கு மகிமை, நான் இரட்சிக்கப் பட்டுவிட்டேன்'' என்றான்.

முதலாளி “என்ன?” என்றார்.

அவன், “நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன். நான் சகோ. ட்ராயுடன் அந்த சிறு கூட்டத்துக்கு சென்றிருந்தேன். அங்கு நான் இரட்சிக்கப்பட்டேன். இயேசு என் இருதயத்தில் வந்தார். நான் அன்பினால் நிறைந்திருக்கிறேன்'' என்றான்.

முதலாளி, “நீ அந்த 'நட்டு'களின் (அதாவது பைத்தியக்காரரின் - தமிழாக்கி யோன்) கூட்டத்திற்கு சென்றிருப்பாய்” என்றார்.

அவன், “ஆம்! தேவனுக்கு மகிமை! அந்த 'நட்டு'களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். சாலையில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு மோட்டார் வாகனத்திலுள்ள 'நட்டு'களை நீங்கள் கழற்றி விட்டால், அது வெறும் காயலான் கடை இரும்புத் துண்டுகளாக மாறிவிடுகிறது'' என்றான்.

அவன் கூறினது சரியென்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் எல்லா 'நட்டு' களையும் கழற்றிப் பாருங்கள்... 'நட்டு'கள் தான் அவைகளை ஒன்றாக சேர்க்கின்றன. சபையையும் ஒன்றாக சேர்ப்பது அதுவே என்பது என் கருத்து. சில சமயங்களில் அது நாகரீகத்தையும் ஒன்றாக சேர்க்கின்றது.



# நீங்கள் யாராவது ஒருவருக்கு ‘நட்’டாக இருக்கின்றீர்கள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: வினோதமானவன், 64-0614E

18 சில நாட்களுக்கு முன்பு நான் பிரஸ்காட்டுக்கு விஜயம் செய்து திரும்பி வந்தேன். நான் அந்த வனாந்தரமான இடத்தை நோக்கி, எப்படி பீனிக்ஸில் அவர்களால் அழகிய மலர்களைக் கொண்ட ஜப்பானிய பூங்கா ஒன்றை அமைக்க முடிந்தது என்று வியந்தேன். நான் பையனாக இருந்தபோது, அந்த இடங்களில் மாடு மேய்ப்பது வழக்கம். பசுக்களுக்கு மேய புல் அங்கே இல்லை. எனவே அவை கள்ளிச் செடிகளை உண்டு வளர்ந்தன.

வனாந்தரத்தை அவர்கள் உபயோகமுள்ள இடமாக மாற்றி வருவதை நான் கவனித்தேன். வனாந்தரத்தில் கள்ளிச் செடிகளும் பூக்களும்.... நாங்கள் வாடகைக்கு எடுத்துள்ள அந்த வீட்டில்

சகோதரி லார்சன் இன்று காலை இங்கிருந்தார்கள் என்று நினைக்கிறேன். அவர்களை நான் கண்டேன். அவர்களுடைய வீட்டின் வெளிப்புறத்தில் அவர்கள் பூச்செடிகளை வளர்க்கிறார்கள். சிறிது புழுதி... அங்குள்ளதெல்லாம் மண் தான். அவர்கள் அங்கு புழுதியை வீட்டின் இரு பக்கத்திலும் நிறைத்து பெரிய பூந்தோட்டத்தை அமைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு காலையிலும் நான் வெளியே சென்று இந்த பூச்செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நாம் தண்ணீர் பாய்ச்சாவிட்டால், அவை பட்டு போய் விடும். மேலும் அவைகளை பூச்சிகள் அடைந்து அரித்து போடாமலிருக்க, பூச்சி நாசினியைத் தெளிக்க வேண்டும்.

19 அங்கிருந்து முப்பது அடி தொலைவில் நீங்கள் சென்றால், சில பூக்கள் அங்கு வனாந்தரமான இடத்தில் வளருகின்றன. நீங்கள் இருபது அடி ஆழம் தோண்டினாலும் மண்ணைத் தவிர

வேறொன்றும் இருக்காது. அங்கு தண்ணீரே கிடையாது. அவைகளுக்கு பூச்சி நாசினி தெளிப்பது யார்? பாருங்கள்? ஆனால் பூந்தோட்டத்திலுள்ள செடிகளுக்கு நீங்கள் பூச்சி நாசினி தெளிக்காமலும் தண்ணீர் பாய்ச்சாமலும் இருந்தால் பூச்சிகள் அவைகளை அரித்து விடும். ஆனால் வனாந்தரத்திலுள்ள செடிகளை பூச்சிகள் அணுகவே முடியாது. அவை களை நாள் தோறும் பேணி பாதுகாத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசிய மில்லை. ஏனெனில் அவை சிருஷ்டி கர்த்தரால் உண்டாக்கப்பட்டவை. மற்றதோ கலப்பு செய்து உண்டாக்கப்பட்டது.

நான் நினைக்கிறேன், இன்றைக்கு கிறிஸ்தவ மார்க்கம் ஜனங்களுக்கு 'நட்டு' களாக காணப்படும் காரணம் என்ன வெனில், நம்மிடையே உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் இராமல், கலப்பு செய்து மறு உற்பத்தி செய்யப்பட்டு, சபையில் அவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக

பேணி பாதுகாக்கப்பட்டு, நாசினி தெளிக்கப்பட வேண்டிய கிறிஸ்தவர்கள் இருப்பதால் தான்.

20 முதலாம் சபை எப்படி இருந்தது என்று எண்ணிப் பார்க்கிறேன். அதனுடன் மறு உற்பத்தி செய்யப்பட்ட இன்றைய சபையை ஒப்பிட்டுப் பாருங்கள். முதலாம் சபையுடன் இதை எவ்வகையிலும் ஒப்பிடவே முடியாது. முதலாம் சபை பரிசுத்த ஆவியைப் பெற்று தேவன் பேரில் விசுவாசமுள்ள கரடுமுரடான விசுவாசி களைக் கொண்டதாயிருந்தது. அவர்களை நீங்கள் முதுகில் தட்டி, இதில் சேர்த்துக் கொள்கிறேன்' என்று கூற வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவர்களுக்கு டீகன் பதவி அளிக்கப்பட்ட காரணத்தால், அவர்கள் ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு மாறவில்லை. அது கலப்பு செய்த மறு உற்பத்தி.

21 நான் 'கடைசி இராப்போஜனம்' என்னும் மைக்கல் ஆஞ்சலோவின் மூல வர்ணப்படத்தைக் குறித்து யோசித்துக் கொண்டிருந்தேன். அவன் தான் அதை வர்ணம் தீட்டினான் என்று நினைக்கிறேன். அந்த மூல படத்தின் விலை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அது விலை மதிக்க முடியாத ஒன்று. லட்சக்கணக்கான டாலர்களும் அதன் விலைக்கு ஈடாகாது. ஆனால் அதன் மலிவான மறு உற்பத்தியை நீங்கள் இரண்டு டாலர்களுக்கு வாங்க லாம்.

அதனால் தான் இன்றைக்கு ஜனங்கள் கரடுமுரடான; உண்மையான விசுவாசி களைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அவர்கள் அவர்களுக்கு நட்டுகளாக காணப்படுகின்றனர். உங்களுக்குத் தெரியுமா, உலகம் மிகுந்த சீர்கெட்ட நிலையை அடைந்து வருவதால், அதை நேராக்க எப்பொழுதாவது ஒரு முறை ஒரு 'நட்டு' தோன்ற வேண்டியதாயுள்ளது.

சிறிது வேறுபட்ட யாராகிலும் ஒருவர் காட்சியில் தோன்றும் போது, அவன் அந்த சந்ததிக்கு 'நட்'டாகி விடுகிறான்.

யார் தான் நட்டு அல்லவென்று அன்றொரு நாள் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் யாராவது ஒருவருக்கு 'நட்'டாக இருக்கின்றீர்கள். உலகம் முழுவதுமாக பைத்தியக்கார நிலைமையை அடைந்து வருகிறது என்று நான் நம்புகிறேன். சரிக்கும் தவறுக்கும், உண்மைக்கும் பிழைக்கும் ஜனங்கள் வித்தியாசம் அறிய முடியாத காலம் இதுவென்று உங்களுக்குத் தெரியுமா?.

22 வேதாகமத்தை மறுபடியுமாக பள்ளிக்கூடங்களில் படிக்க வேண்டும் என்று ஓட்டு போடும் விஷயத்தில் அவர்கள் மௌனமாயிருப்பதை நீங்கள் காணலாம். அவர்களுடைய அரசியல் எப்பக்கத்தில் சாயப் போகின்றது என்று அவர்கள் அறியாமலிருக்கின்றனர். அதை

சற்று யோசித்துப் பாருங்கள்! இந்தியானா வில் அது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அரிசோனா நாட்டில், வேதாகமத்தை பள்ளிக் கூடங் களில் படிப்பது சட்ட விரோதமானது. இந்தியானாவிலும் ஐக்கிய நாடுகள் முழுவதிலும் அப்படியே, ஏனெனில் ஏதோ ஒரு நாத்தீக ஸ்திரீ முழு திட்டத்தையும் மாற்றி அமைத்துவிட்டாள். நமது பொது ஜன பள்ளிக்கூடங்களில் வேதாகமத்தை படிப்பதென்பது சட்ட விரோதமானது என்பது ஞாபகமிருக் கட்டும். ஆனால் விசுவாசிகள் செலுத்தும் வரிகள் பள்ளிக் கூடங்களில் அவிசுவா சத்தை கற்பிக்க உதவுகின்றன.

அரசியல்... நமக்கு மற்றொரு ஆபிரகாம் லிங்கன் அவசியம்; நமக்கு மற்றொரு பாட்ரிக் ஹென்றி அவசியம். அரசியல் சார்பின்றி சரியானதை சரியான தென்றும், தவறை தவறென்றும் தைரிய

மாக எடுத்துரைக்கும் அமெரிக்கர் ஒருவர் அவசியம்.

23 தேவனுடைய வார்த்தையா அல்லது ஸ்தாபன சபையா, எது சரியென்று இன்றைய போதகர்கள் தீர்மானிக்க இயலவில்லையென்று உங்களுக்குத் தெரியுமா? எந்த பாதையில் செல்வதென்று அவர்கள் அறியாமலிருக்கின்றனர். எது சரி என்றும் எது தவறென்றும் அவர்களால் தீர்மானிக்க இயலவில்லை. “வேதாகமம் அவ்வாறு உரைக்கிறதென்று எனக்குத் தெரியும், ஆனால் எங்கள் சபையோ இவ்விதம் கூறுகிறது. ''பாருங்கள்? எது சரியென்றும் எது தவறென்றும் தீர்மானிக்க மக்கள் திறனற்றவர்களாயுள்ளனர். வேதாகமத்துக்கு முரணாயுள்ள எதுவுமே தவறாகும்! தேவனுடைய வார்த்தையே சரி, ஒவ்வொரு மனிதனுடைய வார்த்தையும் பொய். அது தேவனுடைய வார்த்தைக்கு முரணாக அமைந்துள்ளது. இந்த நேரத்தில் சரியான ஒன்றின் மேல் நீங்கள்

உறுதியாக நின்றால், நீங்கள் 'நட்'டாக ஆகி விடுகிறீர்கள்.

வேதாகமத்தில் காணப்படும் ஒரு சிலரை நாம் நினைவுபடுத்திக் கொள்வோம்.

24 தீர்க்கதரிசியாகிய நோவா மகத்தான விஞ்ஞான காலத்தில் வாழ்ந்தான். அக்காலத்தில் அவர்கள் கூர்நுனிக் கோபுரங்களையும், ஸ்திரீயின் முகமும் சிங்க உடலும் இறக்கைகளுடன் கூடிய பிரம்மாண்டமான சின்னங்களையும் (Sphinxes) கட்டினர். ஆகாயத்தில் தண்ணீர் இல்லையென்று விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் அவர்களால் நிரூபிக்க முடிந்தது... இதோ இந்த கிழவன் அங்கு வந்து ''வானத்திலிருந்து மழை பெய்யப் போகிறது' என்று கூறுகிறான். நோவா அந்த சந்ததிக்கு 'நட்'டாக இருந்தான். அவன் 'நட்'டாக ஆகிவிட்டான்.

மோசேயைக் குறித்து சிந்திப்போம். இன்று காலை நாம் பேசினது போன்று மோசே பார்வோனிடம் சென்று, “இந்த அடிமைகளை வெளியே கொண்டு போக கர்த்தர் என்னை அனுப்பினார்'' என்றான். அவன் கையில் ஒரு கோலுடன், முழு உலகத்தையும் வென்ற அந்த மகத்தான சேனைக்கு எதிராக நின்றான். பார்வோன் விஞ்ஞான பாண்டித்யம் அனைத்தும் கொண்டவனாய், மோசேயை 'நட்'டாக பாவித்தான். அவன் அவர்களுக்கு ஒரு 'நட்'டாக காட்சியளித்தான்.

25 தீர்க்கதரிசியாகிய எலியா நாகரீகம் செழித்தோங்கிய அந்த மகத்தான காலத்தில் வாழ்ந்தான். அந்நாட்களில் ஆகாபும் யேசபேலும் உலகத்தை ஆண்டனர். யேசபேல் உடுத்தின நாகரீக உடைகள் போன்ற உடைகளை அவள் மற்ற பெண்களும் உடுக்கும்படி செய்தாள். அவள் தீட்டிய வர்ணங்கள், அவளை அழகாக்கிக் கொண்ட அழகு சாதனங்கள்....

பைத்தியக்காரக் கிழவனாகிய எலியா காட்சியில் தோன்றி முழு தேசத்தையும் எதிர்த்தபோது, அவன் ஆகாபுக்கு ஒரு 'நட்'டாக காட்சியளித்தான். அது உண்மை!

தீர்க்கதரிசியாகிய ஆமோஸ் இன்றைய ஹாலிவுட் போல் அந்நாளில் திகழ்ந்த சமாரியாவுக்கு சென்றான். அங்கு பெண்கள் ஆபாசமாக உடை உடுத்தி, பகிரங்கமாக விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர், அவர்கள் எவ்வாறு பகிரங்கமாக மற்ற மனிதர்களுடன் வாழ்ந்து...

26 இன்றைக்கும் அவ்வாறே அது உங்கள் முன்னிலையில் பகிரங்க விபச்சாரமாயுள்ளது.

உண்பதற்காக அன்றொரு இரவு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சென்றிருந்தேன். அங்கு இளைஞர்களும் இளம் பெண்க ளும் தங்கள் விருப்பப்படி கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருந்தனர். என்

தங்கையே, அது மறைவான விபச்சாரம் என்று உனக்குத் தெரியுமா? ஒரு இளைஞன் உன்னை முத்தம் செய்யும் போது, அவன் ஏற்கனவே உன்னுடன் விபச்சாரம் செய்தாயிற்று. உனக்கு அவனுடன் கல்யாணமாகும் வரைக்கும் அவன் உன்னை முத்தம் செய்ய நீ அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் சுரப்பிகள் - ஆண் சுரப்பிகள், பெண் சுரப்பிகள் இரண்டுமே - உதடுகளில் உள்ளன. உங்களுக்குப் புரிகிறதா? ஆண் சுரப்பிகளும் பெண் சுரப்பிகள் இரண்டுமே - உதடுகளில் உள்ளன. உங்களுக்குப் புரிகிறதா? ஆண் சுரப்பிகளும் பெண் சுரப்பிகளும் ஒன்று சேரும் போது, அது எங்கிருந்த போதிலும், நீங்கள் மறைவாக விபச்சாரத்தில் ஈடுபடுகின்றீர்கள். உன் முகத்திலிருந்து அந்த திரை தூக்கப்பட்டு நீ அவன் மனைவியாகும் வரைக்கும், அவன் உன்னை முத்தமிட அனுமதிக்கக் கூடாது. அப்படி செய்யாதே! அது விபச்சாரம்

செய்தல். அது ஆண் சுரப்பிகளும் பெண் சுரப்பிகளும் ஒன்றாக கலத்தல்.

ஏன் ஒரு ஆண் மற்றொரு ஆணை, ஒரு பெண் மற்றொரு பெண்ணை உதடு களில் முத்தமிடுவதில்லை? ஏனெனில் சுரப்பிகள் ஒன்றோடொன்று இனம் கலவாது. சுரப்பிகளின் இனக் கலப்பினால் குழந்தைகள் பிறக்கின்றன. எனவே அது எங்கு பார்த்தாலும் ஏறக்குறைய பகிரங்க விபச்சாரமாய் உள்ளது. திரைப்படங்களை யும் மற்றெல்லாவற்றையும் பாருங்கள். இப்படிப்பட்ட செயல்களையே நீங்கள் காணலாம். நடத்தை கெட்ட தன்மை அதிகரித்துக் கொண்டே வருவதில் வியப்பொன்றுமில்லை. அந்த பெண்களை உதடுகளில் முத்தமிடுவது விபச்சாரம் என்றும், அவர்கள் மனந்திரும்பாமற் போனால் தேவன் அவர்களை மன்னிக்க மாட்டார் என்று அறிந்த பிறகும், அவர்கள் எப்படி அதை அலட்சியப்படுத்தி

அதையே திரும்பத் திரும்பச் செய்ய முடியும்?

27 இந்த மகத்தான தீர்க்கதரிசியாகிய ஆமோஸ் அங்கு வந்தபோது... அவன் சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவன். ஏனெனில் அவனைக் குறித்து அதிகம் எழுதப்பட வில்லை. ஆனால் அவன் தேவனுடைய வார்த்தையைக் கொண்டிருந்தான். அவன் நகரத்தை நோக்கி... அங்கு பூங்காக்களில் ஆண்கள் பெண்களின் தோள்கள் மேல் கை போட்டுக் கொண்டும், பெண்கள் ஆண் களின் தோள்கள் மேல் கை போட்டுக் கொண்டும் இருந்தனர். அது நவீன ஹாலிவுட்டாகத் திகழ்ந்தது. அவன் நகரத்தின் வழியே நடந்து சென்று, “மனந் திரும்புங்கள், இல்லையேல் அழிந்து போவீர்கள்” என்றான். அவன் ஒரு 'நட்'டாக இருந்தான். அவர்களுக்கு அவன் பைத்திக்காரனாக காட்சியளித்தான்.

28 யோவான் ஸ்நானன் காட்சியில் தோன்றினபோது, அந்நாளில் இருந்த மத ஸ்தாபனங்களுக்கு 'நட்'டாக காணப் பட்டான். அவன் தன் தகப்பனின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து ஒரு ஆசாரியனாக ஆகும் வாய்ப்பு இருந்தது. ஆனால் அவன் அப்படி செய்ய மறுத்தான். ஏனெனில் அவனுடைய வேலை மிகவும் முக்கியமானதால், தேவன் அவனை கோட்பாடுகள் ஸ்தாபனங்கள் இவைகளி னின்று விலக்கி காத்தார். அவன் மேசியா வின் வருகையை அறிவிக்க வேண்டி யவன். அவன் பரிசேயர், சதுசேயர், மற்றவர்களுடன் எவ்வித தொடர்பும் கொள்ளாமல், அந்த முழு கூட்டத்தையும் புறக்கணித்து, "ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச்

சொல்லுகிறேன்'' என்றான் (லூக். 3:8). அவனுடைய நாட்களில் இருந்த மத உலகிற்கு அவன் ஒரு 'நட்'டாக காணப்பட்டான். அது உண்மை !

29 இயேசு காட்சியில் வந்தபோது, அவருடைய நாட்களில் இருந்த மத சம்பந்தமான மக்களுக்கு அவர் ஒரு 'நட்'டாக காணப்பட்டார். அவர்கள் ''நீ ஒரு சமாரியன் உனக்கு மூளை கோளாறு ஏற்பட்டுள்ளது என்றனர். அவர்கள், 'நீ ஒரு பைத்தியக்காரன்'' என்றார்கள். உங்கள் கர்த்தரும் இரட்சகருமானவர் அவர்களுக்கு பைத்தியக்காரராகத் தென்பட்டார். ஆசாரியனாவதற்கும், என்றாவது ஒரு நாள் பிரதான ஆசாரியனாவதற்கும் கமாலியேலால் பயிற்றுவிக்கப்பட்ட பவுல் தமஸ்குவுக்குப் போகும் வழியில் இயற்கைக்கு மேம்பட்ட ஒரு ஒளியால் தாக்கப்பட்டு வீழ்த்தப்பட்டான். அவன் மேலே நோக்கின போது, அவன் யூதனாதலால், அதுதான் தன் ஜனங்களை

வழிநடத்தின அக்கினி ஸ்தம்பம் என்று அறிந்து கொண்டான். அவன், 'ஆண்டவரே, நீர் யார்?' என்றான்.

அவர், ''நானே இயேசு“ என்றார்.

அவன் தன் கல்வியைக் கைவிட்டு, பள்ளிக்கூடத்தில் பயின்ற வேதசாஸ்திரம் அனைத்தும் கைவிட்டு, தெருப் பிரசங்கியாக மாறின போது, அவன் ஒரு 'நட்'டாக ஆனான். அவன், ''நான் கிறிஸ்துவுக்காக பைத்தியமானேன்'' என்றான்.

அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக ஜனங்கள் எண்ணினர். அவன் பெஸ்துவிடம், ''நான் பைத்தியக்காரன் அல்ல'' என்றான். (அப். 26:25). அவன் தேவனை அறிந்திருந்தான், அவ்வளவு தான். ஆனால் ஒரு மத சம்பந்தமான கூட்டத்தில் தேவனை அறிந்திருப்பது என்பது - இதை நீங்கள் காணத் தவற மாட்டீர்கள் என்று நம்புகிறேன் - இந்த

நாளில் மத சம்பந்தமான ஒரு கூட்டத்தின் மத்தியில் இயேசுவை அறிந்திருப்பது உங்களை 'நட்'டாக செய்து விடுகிறது. அது மாறவேயில்லை. இதில் நான் அதிக நேரம் நிலைத்திருக்கலாம், ஆனால் நான் ஜெப வரிசைக்காக வேகமாக முடிக்க விரும்புகிறேன்.

30 அந்த ஜெர்மன் போதகரான மார்டின் லூத்தர் ஒருநாள் இராப்போஜனத்தை கையிலெடுத்து படிக்கட்டின் மேல் எறிந்து, ''இது இயேசுகிறிஸ்துவின் சரீரம் அல்ல. இது இங்கு செய்யப் பட்ட அப்பம்'' என்றார். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று அவர் பிரகடனம் செய்தார். அவர் கத்தோலிக்க சபைக்கு 'நட்'டாக காணப்பட்டார். வேண்டுமானால் அவர் அப்படி செய்ததற்காக அவர்கள் அவரைக் கொன்றிருக்கலாம். ஆனால் அவர் “நட்” என்று அவர்கள் கருதினால், அவரை சும்மா விட்டு விட்டார்கள். அவர் அந்த 'நட்' என்று அவர்கள் கருதினதால்,

அவரை சும்மா விட்டு விட்டார்கள். அவர் அந்த சந்ததிக்கு 'நட்'டாக ஆனார்.

இங்கிலாந்தில் நடத்தை கெட்ட நேரத்தில் ஜான் வெஸ்லி... வெஸ்லியன் எழுப்புதல் காட்சிக்கு வந்தபோது, முழு உலகமே ஊழலில் கிடந்து, எங்கு பார்த்தாலும் ஒழுக்கம் கெட்ட நிலை காணப்பட்டது. ஆங்கிலிகன் சபை வெகு தூரம் அகன்று சென்று, அது கால்வீனிய கருத்துக்களைக் கொண்டதாய், இனி ஒருபோதும் எழுப்புதல் கிடையாது என்னும் நிலையை அடைந்து விட்டது. அப்பொழுது ஜான்வெஸ்லி பரிசுத்த மாக்கப்படுதல் என்பதுடன் காட்சியில் எழும்பி, நடத்தை கெட்ட நிலையை சுத்தம் செய்யத் தொடங்கினார். அவர் 'நட்'டாக ஆனார்.

31 வெஸ்லி எழுதின புத்தகத்திலிருந்து இதை எடுத்துரைக்கிறேன். அவர் வழியில் வந்து கொண்டிருந்தபோது, இங்கிலாந்து

சபையைச் சேர்ந்த ஒருவன்.... அவரை எல்லோரும் பைத்தியக்காரன் என்று கருதினர். எனவே அவன் வழி மறித்தான். திரு. வெஸ்லி சிறு உருவம் படைத்தவர். பெரிய உருவம் படைத்த அவன் அவரைக் கன்னத்தில் அடித்து கீழே தள்ள எத்தனித்து வழி மறித்து நின்றான். திரு. வெஸ்லி அவனிடம், ''ஐயா,என்னை மன்னியுங்கள். வழி விடுகின்றீர்களா? நான்அவசரமாக செல்கிறேன்'' என்றார்.

அந்த ஆங்கிலிகன், ''நான் முட்டாள் களுக்கு வழி விடுவதில்லை' என்றானாம்.

வெஸ்லி மிகவும் மரியாதையுடன் தன் தொப்பியை கீழே இறக்கி விட்டு, அவனைச் சுற்றி நடந்து சென்று, “நான் எப்பொழுதும் முட்டாள்களுக்கு வழிவிடு பவன்'' என்றாராம். எனவே பாருங்கள், அவன் தான் உண்மையில் 'நட்'. ஒருவர் கிறிஸ்துவுக்காக அப்படி இருந்தார்; மற்றவன் தன் சபைக்காக அப்படி

இருந்தான். எனவே நீங்கள் யாருக்காவது 'நட்'டாக இருக்கிறீர்கள். ஆம்!

32 ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பெந்தெகொஸ்தேயினர் காட்சியில் வந்த போது, ஜனங்கள் அவர்களைப் பைத் தியக்காரர் என்றனர். அவர்கள் 'நட்'டு களாக காணப்பட்டனர். ஏனெனில் அவர் கள் காட்சியில் எழும்பின் போது சபை களில் காணப்பட்ட அசுத்தத்தை கடிந்து கொண்டனர். ஆனால் பெந்தெகொஸ் தேயினர் என்ன செய்து விட்டனர்? அவர்கள் வெளிவந்த அதே வாந்திக்கு, அதே ஸ்தாபன அசுத்தத்திற்கு, திரும்பிச் சென்று விட்டனர். அது எதைக் குறிக்கிறது தெரியுமா? வேறொரு 'நட்' எழும்புவதற்கு நேரம் என்று. ஆம், அப்படிப்பட்ட வேறொருவர் எழும்புவதற்கு இதுவே நேரம். அது உண்மை .

கவனியுங்கள், ஒரு 'நட்'... ஒரு 'நட்' இருப்பதற்கு முன்பு, அந்த 'நட்'

பொருந்துவதற்கு ஒரு 'போல்ட்' (bolt) இருக்கவேண்டும். அந்த 'நட்', 'போல்ட்'டுடன் மறையினால் (thread) இணைகிறது. அப்படி இணையாவிட்டால், அது உபயோகமில்லை. கவனியுங்கள், நோவாவின் காலத்தில் மறையினால் இணைக்கப் பட்டவர்கள் அனைவரும், சுவிசேஷ செய்தியுடன் மறையினால் இணைக்கப்பட்டிருந்தனர். 'நட்'டான நோவா அவர்களை பேழைக்குள் இழுத்துக் கொண்டான். உங்களுடைய மறை என்னவென்பதைப் பொறுத்தது. நீங்கள் எதனுடன் மறையினால் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. நீங்கள் உலகத்துடன் மறையினால் இணைக்கப்பட்டிருந்தால், அந்த உலகம் உங்களை இழுத்துக் கொள்ளும். நீங்கள் வார்த்தையுடன் மறையினால் இணைக்கப்பட்டிருந்தால், வார்த்தை உங்களை இழுத்துக் கொள்ளும். எனவே நீங்கள் எதனுடன் மறையினால்

இணைக்கப் பட்டிருக்கிறீர்கள் என்றும், எந்த நாட்டை பின்பற்றுகிறீர்கள் என்பதை யும் அது பொறுத்தது.

ஆனால் நோவா, தேவனுடைய வார்த்தையுடன் 'நட்'டாக இணைந்திருந்த காரணத்தால், அவன் வாழ்ந்த விஞ்ஞான உலகிற்கும் மத சம்பந்தமான உலகிற்கும் அவன் 'நட்'டாக காணப்பட்டதால், இரட்சிக்கப்படக் கூடியவர்களை, அதற் கென்று முன் குறிக்கப்பட்டவர்களை, அந்த 'நட்'டுக்கு முன்பே உண்டாக்கப்பட்ட 'போல்டு'களை அவனால் பேழைக்குள் இழுத்துக் கொள்ள முடிந்தது. எந்த ஒரு போல்டும் மறையினால் 'நட்'டுடன் இணைக்கப்பட வேண்டும்.

33 சாத்தானுக்கும் சில 'போல்டு'களும் 'நட்'டுகளும் உள்ளன. அவை இவ்வுலக ராஜ்யங்களின் 'போல்டு'களும் 'நட்'டு களுமாம். மோசே பார்வோனுக்கு 'நட்'டாக காணப்பட்டது போன்று,

பார்வோன் மோசேக்கு 'நட்'டாக காணப் பட்டான். பார்வோன் தன் விஞ்ஞான வித்தைகளின் மூலம் நாட்டையே தன் பக்கம் இழுத்துக் கொண்டான். மோசே தேவனுடைய 'நட்'டாக இருந்த காரணத்தால், சபையை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு இழுத்து சென்றான். நீங்கள் எதனுடன் மறையினால் இணைக்கப் பட்டிருக்கிறீர்கள் என்பதை அது பொறுத்தது. நோவா சபையை உலகத்திலிருந்து பேழைக்குள் இழுத்துக் கொண்டது போன்று. மோசேயும் சபையை எகிப்திலிருந்து, தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி வெளியே இழுத்தான்.

இயேசு சொன்னார். இப்பொழுது, கவனமாயிருங்கள். ஏனெனில் இந்த 'நட்'டுகளும் 'போல்டு'களும் காண்பதற்கு ஒன்று போல் இருக்கும். மத்தேயு 24:24. கூடுமானால் அது தெரிந்து கொள்ளப்பட்ட

வர்களையும் வஞ்சிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.



**நான் இந்த மகத்தான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாய், அல்லது ஒரு எல்விஸ் பிரஸ்லியாய் அல்லது ஒரு பாட் பூனாய் அல்லது நீங்கள் அதை யார் என்று கூற விரும்புகிறீர்களோ அவ்வாறிருப்பதைக் காட்டிலும் இந்த உலகத்தால் புறக்கணிக்கப்பட்ட ஜனங்களோடு என்னுடைய ஸ்தானத்தை தெரிந்து கொண்டு, அவருடைய சக ஊழியனாயிருந்து, கர்த்தராகிய இயேசுவின் குமாரனாயிருக்கவே விரும்புகிறேன். நான் அந்தவிதமாகவே என்னுடைய வழியைத் தெரிந்துகொள்வேன்.**

செய்தி: 58-0720M — விசுவாசத்தினாலே மோசே, Para 107

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**...அங்கே நாம் ஓர் இடத்தைப் பார்க்கிறோம். அங்கே தேவனுடைய குமாரன் அதிகமான நேரத்தை ஜெபத்திலேயே செலவழித்தார். அவருக்குள் இருந்த பரிசுத்தாவியோடு ஐக்கியம் கொள்வதற்கு, இயேசுவே அதிக நேரம் ஜெபிப்பதில் செலவழித்திருப்பாரென்றால், நீயும் நானும் எவ்வளவுக்கதிகமதிகமாய் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும்?**

பவீருவின் குமாரத்தி சுகமடைதல், 55-0227E, பத்தி எண் E-15

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**...எந்த நேரத்திலும் பிசாசு உங்களை மேற்கொள்ள விரும்புவான். அவனுடைய ஆளுகைக்குள் உங்களைக் கொண்டு வர விரும்புவான். உங்களுடைய ஜெப வாழ்க்கையை முறித்துப் போடுவீர்களானால், சகோதரனே, நீ ஒன்றுமில்லாது ஆகிவிடுவாய். அது சரியா.**

ஜீவனுக்காக தாகமாயிருத்தல், 57-0630, பத்தி எண் E-36

# கழுகின் சத்தம்

## டிசம்பர் 25, 2023

